[6th March 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) No.
(b) Does not arise.

கூட்டுறவு நில அடமான பாங்குகள்

*172 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு நில அடமான பாங்குகளில் கடன் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும் பணச்செலவையும் அகற்றுவதற் கான யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MAN-RADIYAR : Yes.

திரு. து. ப. அழகமுத்து : பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அது எந்த கால அளவிற்குள் முடிவு பெறும் ? கடன் பெறுவதற்குச் செல்பவர்கள் அதிகச் செலவு இல்லாமலும் காலதாமதம் இல்லாமலும் கடனைப் பெறுவதற்கான காரியங்களை எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமே அதைச் செய்து தர சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இப் போதே ஆங்காங்குள்ள ப்ரைமரி லான்ட் மார்ட்கேஜ் பாங்குகள் மூலம் 3,000 ரூபாய் வரையில் அவர்கள் பொறுப்பில் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுப்பதற்கு முன்பாக மத்திய நில அடமான பாங்கின் உத்தரவு பெற வேண்டு மென்று இருந்தபோதிலும் இன்னும் குறைத்து 2,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அங்குள்ளவர்களே உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொடுக்க வசதி செய்யப்பட்டிருக் கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நில அடமான பாங்குகளில் கடன் வாங்குவது சம்பந்தமாக ஏற்படுகிற காலதாமதங்கள் சகல வற்றையும் விரைவாக நீக்குவதாக இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னால் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் 2,000 ரூபாய் வரையில் உள்ள விவகாரங்களுக்குத்தான் சீக்கிரமாகப் பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. இது உணவு உற்பத்தி பொறுத்த விஷயம். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இப்படி அடமானம் வைப்பதற்குக் காரணமே அவர்கள் அதை அபிவிருத்தி செய்வதற்காக இருக்கிற காரணத்தினால் இதிலுள்ள சகல தாமதங்களையும் நீக்க விரைவான நடவடிக்கைகள் எடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப் போதே முடிந்த வரையில் இந்த முயற்சிகள் எடுத்துக் கொண் டிருக்கிறார்கள். வாங்கக் கூடிய நபர்கள் அல்லது பார்டிகள் எல்லா

ரிக்கார்ட்களை ஒப்புவிப்பதில் தாமதம் ஏற்படுகிறதே தவிர, மற்றொன்றும் இல்லை. 23 வருடங்களுக்கு என்கம்பரான்ஸ் சர்டிபிக்கட் வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைக் குறைத்து 12 வருடமாகச் செய்யலாமா என்ற யோசனையும் இருந்து கொண்டிருக்கிறது.

UNSTARRED QUESTIONS.

அரக்கோணம் நகராட்சியின் ஆணையாளர்

17 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபை ஆணையாளர் மீது 10—9—1963, 14—10—1963, 21—10—1963 தேதிகளில் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா ?

(இ) அதன் விவரமென்ன ?

பதில்—(அ) & (இ) அரக்கோணம் நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் அவருடைய நிலையான மானேஜர் பதவிக்கு ஏற்கனவே தள்ளப்பட்டார்.

(*a*) & (*b*) The former Municipal Commissioner, Arkonam, has already been reverted to his original post as Municipal Manager.

செய்யாறு மாவட்ட கழக உயர்நிலை பள்ளியின் கட்டிட நிதி

18 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு மாவட்டக் கழக ஆண்கள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மீது கட்டிட நிதிக் கையாடல் முதலியவைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டி 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந் தேதியில் ஏதேனும் முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதன்மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை யாது ?

பதில்—(அ) & (இ) 1964-ம ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மனு ஒன்று 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ந் தேதியில் கிடைத்தது. செய்யாறு திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட, அச்சிட்ட துண்டு வெளியீடு ஒன்றில் மேற்படி தலைமையாசிரியரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த புகார்களை அரசாங்கம் ஏற்கெனவே பரிசீலனைச் செய்து அவை உண்மையல்லவென்று அறிந்ததால் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மேற்படி மனுவின் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுப்பதும் அவசியமில்லையென்று கருதப்பட்டது.

(*a*) & (*b*) A petition, dated 10th January 1964, was received on 28th February 1964. As the Government had already examined the allegations against the headmaster referred to with reference to a printed pamphlet issued by the D.M.K. party of Cheyyar and found them to be not true, no action was considered necessary on the petition, dated 10th January 1964.